
www.anbinmadal.org
உறவைத்
தேடி
உலகின்
உறவுகளைத்
தேடி

**உறவை தேடி – உலகின் உறவுகளை தேடி"**

**ஹலோ" இது உலகத்தின் பொது மொழி,**
**எல்லோரும் விரும்பும் மொழி.**
**இயேசுவின் பொது மொழியோ அன்பு - அப்பா தந்தாய்"**
**என்று அழைக்கும் உன்னத உறவின் மொழி.**
**இன்று இதை எத்தனை பேர் கேட்கின்றோம்.**

**மலிவான இன்றைய மனிதச் சந்தையில்**
**மனிதம் மாலை பொழுதானது (மறைந்து கொண்டிருக்கிறது)**
**மனித நேயம் - நட்பு - நள்ளிரவானது (இருளடைந்து விட்டது)**
**உழைப்பு உச்சி வெயிலானது (கடினமாயிற்று)**
**உறவுகள் ஊமையாகி போனது**
**உலகம் வெறுமையாகி வேடிக்கை பார்க்கின்றது**

**ஆனால்**
**பணமோ - பகலானது – வெளிச்சம் போட்டு விளையாடுகிறது.**
**பாவமோ – பளப்பளக்கின்றது – பக்கத்தில் நிற்கின்றது.**
**பக்தியோ பாதை தெரியாமல் பரிதவிக்கின்றது.**
**பண்பும் பாசமும் பார்க்க முடியாமல் போனது.**

எனவே இம்மானுவேலன் இம்மண்ணிற்கு தந்த அப்பா–தந்தாய் என்ற உறவின் மதிப்பீடுகளை மீண்டும் புதுப்பிக்க வாருங்கள். அவர் பேசுவதை "எப்பத்தா" அதாவது திறக்கப்படு என இன்று கட்டளை இட்டு அவர் கூறுவதை நாம் கேட்கக் காதுகளை மட்டுமல்ல, உள்ளத்தையும் திறந்து நமக்கு கொடுத்த அந்த **உறவின் உரிமையில்** உண்மையாய் கேட்போம்.

இவன்

**உங்கள் அயலான்"**

**A.C. டிசில்வா, சூசையப்பர் பங்கு, வெலிங்டன், ஊட்டி மறைமாவட்டம், தமிழ்நாடு**

**கைப்பேசி - 9025029593, மின்அஞ்சல் - dsilvaac@gmail.com**

1. **முதல் நிலை - இயேசு தீர்ப்புக்கு உள்ளாகின்றார்.**

திவ்விய இயேசுவே

**எனக்கு மட்டுமல்ல, உனக்கும் தீர்ப்பு இன்று உண்டு**

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு யூதர்கள் கெத்சமனியில் என்னைத் தேடி வந்தனர். இன்று - இப்போது, நீங்கள் யாரை தேடி வந்துள்ளீர்கள்? பிலாத்து என்னைப் பற்றி **இதோ பாருங்கள் மனிதன்** ஏனெனில் இவரிடம் நான் ஒரு குற்றமும் காணவில்லை" என்று கூறினான் ஆக **குற்றம் இல்லாதவன் மனிதன்** என்று சான்று பகர்ந்தான். மனிதன் என்பவன் இறைவனின் படைப்பானதால், அவரை அப்பா, தந்தாய் என அழைக்கும் உரிமை பெற்ற மைந்தன் ஆவான். எனவே மனுமகனான எனக்கு உற்ற சகோதரன் ஆவான்.

இறைவன் உன் தந்தை என்பதை நீ மறந்து என்றும் **மாபெரும் பாவி** என உன்னை தாழ்த்துவதில் மிக கவனமாயிருக்கின்றாய். பிலாத்து என்னை தீர்ப்பிட்டதற்காக நீ கோபப்படுகின்றாய். பார், நான் இப்போது உன்னை தீர்ப்பிடப்போகின்றேன். பயப்படாதே, **பாவி என்றல்ல** மாறாக அப்பா தந்தாய் என உரிமையுடன் அழைக்கும் அன்பு மகன் என்று தீர்ப்பிடுகின்றேன். ஆம் முதலில் **நீ ஓர் இறைவனின் பிள்ளை - அதாவது மனிதன்** பிறகு நீ உனது வாழ்வால் பாவி அல்லது புனிதராக மாறுகிறாய். உனது உறவை-உரிமையை மறவாதே.

உனக்கு இந்த தீர்ப்பு மகிழ்ச்சியானது தான், அதே வேளையில் பாவத்திலிருந்து வெளிவர பாதை தெரியாமல் தவிக்கின்றாய். தூரத்த்திலிருந்து ஓடி வரும் ஊதாரி மைந்தனைப் பார். பாவ வாழ்வின் உச்சத்தில், பசியின் கொடுமையில், தன்னை - தன் நிலையை தான் யார் என்பதை விஷேசமாக **தான் இன்னாருடைய பிள்ளை என உணர்ந்து உறவை புதுப்பித்தான்**. தந்தையையும் அவரது அன்பின் மேன்மையையும் அரவணைப்பின் சுகத்தையும் அனுபவித்திட வீழ்ச்சியில் இருந்து எழுந்தான். **எழுந்தவன் தந்தையை நோக்கி நடந்தான்.** தந்தையின் அன்பிற்கும், அரவணைப்பிற்கும் சொந்தக்காரன் ஆனான்.

பிலாத்துவிற்கு, நான் நீதிமான் என தெரிந்தும் தனது பதவி, அந்தஸ்து அதன் சுகங்கள் இதற்கு மேலாக உரோமைக்கும், யூதாவிற்கும் **உள்ள உறவை** நிலைப்படுத்த சிலுவையை எனக்கு தந்தான்.

எனது தீர்ப்பு உனக்கு சிலுவையை அல்ல மாறாக **சினேகத்தை – நட்பின் உறவை** தருகின்றது. நண்பனாக தயக்கம் ஏன்? எழுந்திரு கரம் கோர்த்து முன் இருக்கும் பாதையில் முனைப்போடு விரைந்து செல்வோம்.

**உறவை புரிந்துக்கொள்,**

**எனது நண்பனாய் மாற்றிக்கொள்,**

**நடப்போம், வாழ்வை நோக்கி**

எங்கள் பேரில்…

## 2. இரண்டாம் நிலை - சிலுவையை என் மீது சுமத்துகின்றனர்

திவ்விய இயேசுவே.....

**இயேசுவின் சிலுவை பாரச்சுமையல்ல, அது உனக்கு அன்பின் சுமைதாங்கி**

மனிதகுல மீட்பு எனக்கு தரப்பட்ட பொறுப்பு. இதோ அது என்முன் சிலுவை மரமாக, பாரச்சுமையாக நிற்கின்றது. **நான் விரும்பினாலும் - விரும்பாவிட்டாலும்** படைவீரர்கள் என் தோள் மீது வைத்துவிடுவர். நண்பா உனது நிலை என்ன? உன் தோள் மீது சுமத்தப்பட்டுள்ள சுமைகளை எப்படி ஏற்றுகொண்டாய்? சற்று திரும்பிப்பார்,

உன்னைச் சுமந்த உனது தாய்க்கு நீ சுமையாக இல்லை, உன்னை தோளில் தாங்கிய தந்தைக்கும் நீ பளுவாக இல்லை, கைப்பிடித்து உன்னை வழிநடத்திய ஆசானுக்கு நீ பாரமாக இல்லை, ஏன் இன்று வரை உன்னில் இணைந்திருக்கும் இறைவனுக்கு நீ சுமையாக இல்லை, ஏனெனில் இவர்கள் அனைவரும் தங்களையே மறுத்து **உன்னை இறைச்சித்தம் என ஏற்று அன்பாய், இன்பமாய் சுமந்தனர்.** எனக்கும் இன்று இந்த சிலுவைச்சுமை எளிதானது. ஏனெனில் நான் என்னையே மறுத்து இறைசித்தம் என்ற நுகத்தால் இச்சிலுவையை என் தோள்களில் ஏற்றுக்கொண்டேன். எனவே இது இனிமையாக இருக்கின்றது.

வாழ்வின் பாதையில் தனி ஒரு மனிதனாக **நீ சந்திக்கும் அனைத்து சுமைகளுமே கடமைகள், பொறுப்புகள் என அனைத்துமே இறைவனின் சித்தம்** என்பதை நீ மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ள இறைவன் உனது **வாழ்வின் மையமாக** - நுகமாக இருத்தல் அவசியம். அப்போது இச்சுமை எளிதாகவும், உனது பயணம் இனிதாகவும் தொடரும். எனக்கு இந்தச் சிலுவை **மனிதம் - மற்றும் - மனித நேயம்** என்று இறைச்சித்தத்தால் இணைந்து தோளில் அமர்ந்துள்ளது. உனக்கும் அப்படித்தான் அமர்ந்திருக்கும் நன்கு பார். சிலுவையில் மனிதனாக என்னையும், (இயேசுவையும்) மனித நேயமாக மன்னிப்பையும் (அன்பின் செயல் நிலையையும்) நீ காண முடியும்.

ஒவ்வொரு மனிதனும் இறைவனால் அவரது சாயலாக, அவருடைய ஆவியால் வாழ்வு பெற்றவன். அந்த இறை ஆவி உனக்குள் மலரும் போது **உனக்கு தேவையான உறுதி** உனக்குள் உண்டாகும். (திபா - 51). சுமைகளின் மைய்யமாக இறைவனை நீ உணர்ந்துக் கொள்வாய். உனது வாழ்க்கைச் சுமை இனிதாக அமைவதை நீ உணர்வாய். நான் சிலுவை சுமந்தேன் என வருத்தப்படாதே. இன்று முதல் உவப்போடு **மனிதமும் - மனித நேயமும் கொண்ட சிலுவைகளை இனிதே நீ சுமக்க வேண்டும் என்பது எனது விருப்பம்.** ஏனெனில் நான் உனக்குள் இருக்கும் உறுதி தரும் ஆவியை உன்னுள்ளேயே வைத்திருக்கின்றேன் (திபா - 51).

**கிறிஸ்துவின் சிலுவை என்பது சுமை அல்ல, அது ஓர்**

**அன்பின் சுமைதாங்கி, துன்பத்தில் இடிதாங்கி**

எங்கள் பேரில்....

## 3. மூன்றாம் நிலை – இயேசு முதல் முறை கீழே விழுகின்றார்.

திவ்விய இயேசுவே.....

**இடறல் யாரிடமிருந்து வருகின்றதோ அவர்களுக்கு ஐயோ கேடு (மத் - 18:07)**

அந்தப் பெண் அம்மரத்தின் கனி உண்பதற்கு நல்லது, பார்வைக்கு இனியது என கண்டாள். (தொநூ-3:6)உனது வலக்கண் உனக்கு இடறலாக இருந்தால் அதை பிடிங்கி எறிந்துவிடு என்று மிக வன்மையாக கூறியுள்ளேன். ஏனெனில் இடறல் மிக ஆபத்தானது(மத்-5:29). சிலுவைபாதை தொடங்கியது, **இறைவன் என்னோடு என நான் நடக்க ஆரம்பித்ததும்** முதல் முறை தடுமாறி கீழே விழுந்தேன். ஒரு வேளை முள்முடியால் என் வதனத்தில் வழிந்த இரத்தம் என் பார்வையை மறைத்ததோ? உனது பயணம் எப்படி? தடைகள் அடிக்கடி உண்டா? தடையின்றி பயணிக்க உனது தெளிவான பார்வை மிக அவசியம். **உன் கண்கள்தான் உன் உடலுக்கு விளக்கு**. விளக்கின் வெளிச்சம் உன் பயணத் தடைகளை அடையாளம் காட்டும். அதுமட்டுமல்ல **நீயும் பார்த்து நடக்க வேண்டும்.**

முதல் பெண் ஏவாள் தெளிவான பார்வை கொண்டு விளக்கப்பட்ட கனியை பார்வைக்கு இனியதாய் கண்டதனால் கையை நீட்டிப் பறித்தாள், இறைவனின் இன்ப வனத்தை இழந்தாள். **படைத்தவனுக்கு தன்னை சமமாக எண்ணிப்பார்க்க முய்றசித்ததால் இன்ப வனத்திற்கு வெளியே இடறி விழுந்தாள்.** ஆன்மீக வாழ்வில் நமது பார்வையால் நல்லதையே பார்க்கும் பார்வை கொண்டவனாக வாழ **எனது வார்த்தையும் உனது செப வாழ்வும் உனக்கு இரண்டு கண்களாக இருக்கட்டும்.** நற்செய்தியாளர் நால்வரும் மறக்காமல் குறிப்பிட்டுள்ள புதுமைகளில் குருடர்கள் பார்வை அடைந்த புதுமைதான் முதலிடம் பெறுகின்றது.

பர்த்திமேயு என்ற குருடன் இழந்த பார்வையைப் பெற்றபின் என்னை பின் தொடர்ந்து நடந்தார். ஆம் பார்வை பெறுவது முக்கியமல்ல, **அதைவிட தொடர்ந்து நடப்பது மிக மிக முக்கியம்.** (மாற்-8:22-26) ஏனெனில் பின்னாளில் உலகம் உன்னை தள்ளிவிட்டாலும் நிலைவாழ்விற்கு சாட்சியாக வாழ நீ அழைக்கப்பட்டிருக்கிறாய். மூன்று ஞானிகள் ஏரோதை பார்க்கச்சென்றபோது மறைந்த விண்மீன் பெத்லகேமை நோக்கி என்னை காண மீண்டும் பயணித்தபோது ஒளி வீசி அவர்களுக்கு வழி காட்டியது. இறைவனை காண நீ பயணப்பட்டால் நானே ஒளி, எனது ஒளி உனக்கு வழி காட்டியாக அமையும். இடறலில்லாமல் உனது பயணமும் முடியும்.

**பார்வை சரியானானல் உனது பாதை தெளிவாகும், உனது பயணமும் நிறைவாகும்**

நான் தடுமாறியது முடிந்த கதை நீ தடுமாறாமல் தொடர வேண்டியது

உனது விண்ணக பயணக்கதை.

எங்கள் பேரில் …

4. **நான்காவது நிலை - இயேசுவை அன்னை மரியாள் சந்திக்கிறார்.**

திவ்விய இயேசுவே.....

**அடிமையாக இறைவனைத் தேடி - அன்னை என்னை காண வந்தார்.**

நான் போதகராக மக்கள் மத்தியில் போதித்தபோதும் இன்று குற்றவாளியாக அலங்கோல நிலையில் பயணிக்கின்ற போதும் என் அன்னை என்னை காண வந்தார். நீங்கள் எப்படி?

ஒரு மனிதன் நல்லநிலையில் இருந்தால் ஓடி ஓடி உறவாடுவீர்கள். அவர்கள் ஒடிந்துவிட்டால் எட்டிக்கூட பார்க்கமாட்டீர்கள் - அப்படித்தானே இன்பத்திலும் துன்பத்திலும் ஒன்றாக வாழ்வோம் என திருமண வார்த்தைப்பாட்டில் உறுதி தருகிறீர்கள். அன்று வரை தனியான உறவுகள் அதற்கு பின் இரத்த உறவாக மாறுகின்றது. **அந்த உறவின் வெளிப்பாடு தான் பெற்றோர் – பிள்ளை, தாய் – பிள்ளை உறவு.** அன்று எனது இன்பத்திலும், இன்று எனது துன்பத்திலும் என்னை காண வந்தது, இந்த அன்னையின் உறவு மட்டும்தான்.

சரி, மகனாக எனது உறவு அன்னையின் மீது எப்படிப்பட்டது? எனது மகிமையான நேரத்தில் என்னை அவர்கள் பிறர் துன்பம் துடைக்க வற்புறுத்தியபோதும் அவர்களை மதித்து கானாவூரில் திராட்சைரசம் தந்தேன். இன்று இந்த அவலமான அலங்கோல நிலையிலும் என்னை காண வந்தபோதும் அவர்களை கண்ணுற்றேன். என் தாய் எனக்கு தந்த ஆறுதலையும் தேற்றுதலையும் ஏற்றுக்கொண்டேன். இப்போது இறைச்சித்தம் உங்களுக்கு நினைவு படுத்துவது எங்கள் இருவரின் துன்பங்களைப் பற்றியல்ல மாறாக **இந்த சந்திப்பின் உயிரான எங்கள் உறவின் மேன்மையை சிந்திக்க அழைக்கின்றது.**

பயணங்கள் மிகவும் வசதி குறைவோடும், ஆபத்தாகவும் இருந்த காலத்தில் பெத்லகேம் முதல் கல்வாரி வரை நானும் என் அன்னையும் தொடர்ந்து சந்தித்துக் கொண்டோம். இன்று உங்களுக்கு கண் இமைக்கும் நேரத்தில் காண முடியாத தூரங்களுக்கு கண்கொள்ளா வசதிகளுடன், பாதுகாப்புடன் பயணிக்க முடியும். இதை நீயும் மறுக்க முடியாது. நேற்று வரை எப்படி எதற்கு பயணித்தாய் என்பது மறக்க வேண்டிய கேள்வி. மாறாக **இன்று முதல் எப்படி உன் பயணம் இருக்க போகிறது** என்பது சிந்தையில் நிறுத்த வேண்டிய கேள்வி.

இனிமேல் **உனது பயணங்கள் அதனால் உருவாகும் உறவுகளின் சந்திப்பு** உனது அயலானுக்கு நட்பின் விருந்தாக, நன்மையின் பரிசாக, வாழ்த்துகளின் ஒளியாக, பலவீனத்தில் பலமாக, தனிமையில் பாசத்தின் அரவணைப்பாக, பயத்தில் தைரியமாக, வீழ்ச்சியில் ஊன்றுகோலாக, துன்பத்தில் விடுதலையாக, ஏமாந்தவனுக்கு நம்பிக்கையாக அனைத்துக்கும் மேலாக **நானே உயிர் என்ற என்னை** அவனுக்கு தருகின்ற உயிர் நண்பனாக பயணிப்பாயாக..

**இன்று மனிதன் இழந்திருக்கும் மாபெரும் பொக்கிஷம்,**
**ஒருவர் ஒருவரை சந்திக்கும் அந்த உறவின் உச்சத்தைத்தான்.**

பணம் தந்தால் எல்லாம் சரியாகி விடும் என்ற தவறான ஒரு கணிப்பு - மனித நேயத்தை குழி தோண்டி புதைத்து விட்டது.

**மனிதநேய சந்திப்புக்கள் மலராக மலர்ந்திட சிலுவை மரத்தை காண வா.**

எங்கள் பேரில்.....

### 5. ஐந்தாம் நிலை - சீமோன் சிலுவையை சுமக்க உதவி செய்கிறான்

திவ்விய இயேசுவே.....

**உழைப்பு உயிர் காக்கவே**

எனக்கு சுகம் தர சிமியோன் சிரமத்தை ஏற்றுக்கொண்டார். அன்புச் சகோதரமே, சேவகர்களால் நிர்பந்திக்கப்பட்டு வேலையை முடித்து களைத்துவரும் நேரத்தில் தனக்கு ஆபத்து வரக்கூடாது என்பதால் தன்னை போல் தள்ளாடும் ஒரு மனிதனுக்கு இயன்ற உதவியை செய்ய சீமோன் முடிவெடுத்தார். **நான் யார் என்று தெரியாமலேயே எனது பலவீனத்தில் என்னை பலப்படுத்த வந்தார் இவர்.** ஒருவேளை இந்நிகழ்வில் இவர் இறந்துபோகவும் வாய்ப்பிருந்தது. இருந்தாலும் எனக்கு உதவினார் . படைவீரரின் கட்டளைக்கு கீழ் படிந்தார்.

இன்று உனக்கு வரும் கோரிக்கைகள், விண்ணப்பங்கள், கட்டளைகள் மற்றும் அறிவுரைகள் என எதை நீ மனபூர்வமாக ஏற்றுக்கொள்கிறாய்.? அனேகமாக - எளிதாகவும், விரைவாகவும் பிறர்க்கு நீ கூறும் பதில்கள்; **(1) எனக்கு நேரமில்லை - (2) என்னால் இதைச் செய்ய முடியாது** எனறு கூச்சலிடுவதல்லவா உனது பழக்கம்.

அன்று ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களும் தன் உணவாக கொண்ட சிறுவன் எனக்கு தேவை என்பதற்காக எனது சீடர்களிடம் அதை கொடுத்தான். அந்த சிறுவனுக்கு நான் யார் என்று தெரியாது. ஆனால் முடிவில் பனிரெண்டு கூடைகள் நிரம்ப அந்த உணவு மீதம் இருந்ததை அவன் கண்டான். சிமியோன் எனது மரணவேளையில் நான் யார் என்று அறியாமல் உதவினான். அவனது செயல் என் பாடுகள் நினைவுகூறும் பொழுதெல்லாம் நிறைவாக நினைவு கூறப்படுகிறது. **சிமியோனாக நீ மாறாவிட்டாலும், சிறுவனாக மாறலாமே**. உனது உணவு எண்ணிக்கையில் அடங்காமல் மீதம் இருப்பதையும் காணலாமே.

உன்னால் எப்படி முடியும் என யோசிக்கிறாயா? **நீ யார் என்று உனக்கு தெரியுமா?** பரமபிதா தனது பரிசுத்த கரங்களால் தனது சாயலாக படைத்து, உனக்கு தன் தூய ஆவியை உயிராக அளித்து, அவரது படைப்புகளை ஆண்டு அனுபவித்திட, **சம்மனசுகளைவிட உன்னை சற்று தாழ்வாக படைத்துள்ளார்.** இப்படிப்பட்ட உயர்வுள்ள மனிதனான நீ பிறருக்கு உன்னை கொடுத்துப் பார். கல்வாரியில் ஒரே ஒருமுறை மனிதனாக நான் என்னை இறைவனுக்கு ஒப்புக்கொடுத்தேன் - **பயன்** - இன்று எத்தனை இயேசு அயலானாக, சக மனிதனாக நிற்கிறார்கள் என்று உன்னை சுற்றிப்பார். உன்னையும் சிறிது உலகிற்கு கொடுத்துப்பார், நீ கொடுத்ததின் பயன்கள் என்ன என்பதை உலகாலும் எண்ணமுடியாது. உன்னாலும் கொடுக்க முடியும். அதை நீ மறுக்க முடியாது.

**வாங்கிக் கொள்வது நமது ஏழ்மையின் வெளிப்பாடு.**
**கொடுத்து உதவுவது நமது மகிமையின் வெளிப்பாடு.**
ஆம்!
அந்த மகிமை உன்னுள் உள்ள இறைவனாகும்.

**இழப்பதற்கு ஒன்றுமில்லை, இருப்பதை கொடுப்பதினால்.**
**எடுத்துச்செல்ல ஏதுமில்லை, உனதாக இல்லாததால்.**

உனது கரங்களால் உன்னை அரவணைக்க முடியாது, ஆனால் உன் அருகில் உள்ள அயலானை அரவணைக்க முடியும். **புரிந்துக்கொள் அன்பை பகிர்ந்துக்கொள்**.

எங்கள்பேரில்......

## 6. ஆறாம்நிலை – வெரோணிக்காள் எனது முகத்தை துடைக்கின்றாள்.

திவ்விய இயேசுவே.....

**மனம் இருந்தால் மார்க்கம் உண்டு**

நீங்கள் பயன்படுத்தும் முதுமொழி. இந்த முதுமொழிக்கு உயிர் தந்து வாழ்வாக்கியவள் இந்த பெண். தன் உயிரையும் துச்சமென மதித்து, உணர்ச்சி கொண்டவளாக எனது அலங்கோல வேதனைகளை கண்டு என்மீது அவளுள் - அதனால் ஏற்பட்ட பரிவும், இரக்கமும்; அவளுடைய வீரச்செயலுக்கு முதலாயிற்று. கண் இமைக்கும் நேரத்தில் தோன்றி மறையும் **இடிமின்னல் போல் வந்தாள், துடைத்தாள் எனது வதனத்தை, சென்று மறைந்தாள்.** இவள் எனக்கு யாரும் இல்லை, ஆனால் மனித உணர்வுகள் உள்ள அவளுக்கு நான் எல்லாமுமாய் இருந்திருக்கின்றேன். எனவே மாந்தர் என்றென்றும் எனது முகத்தை முகமுகமாய் கண்டு மகிழ அவள் கொண்டு வந்த துகில் மீதினில் என் முகச்சாயலை பெற்றுக்கொண்டால் பரிசாக.

இந்நிகழ்ச்சிக்கு முன்பும் - பின்பும் வெரோணிக்காளை யாருக்கும் தெரியாது. ஆக, **நல்லதொரு காரியத்தை செய்ய முன்னுரையும்-முடிவுரையும் தேவையில்லை.** பெண்களை கேளிக்கை பொருளாகவும் ஆண்வர்கத்தின் அடிமையாகவும் பாவித்த யூத சமுதாயத்தில் பெண்களுள்ளும் **செயல் வீராங்கணைகள்** உண்டு என்று **செய் அல்லது செத்துமடி** என துடைத்தாள் என் முகத்தை வெரோணிக்காள்.

சரி, இனி உனக்கு ஒரு கேள்வி இந்த வெரோணிக்காளைப்போல **முகமறியா ஒருவருக்கு** நீ உதவ நேர்ந்தால் உன் மனம் கேட்கும் கேள்விகள்.. யார் இவர், என் ஜாதிக்காரரா - ஊர்காரரா - உறவினரா, என எத்தனை கேள்விகள் கேட்கின்றாய். **கேள்விகள் கேட்டாலும் பரவாயில்லை, துணிந்து உதவிக்கரம் நீட்டி இருக்கின்றாயா** அல்லது **எனக்கு வசதி இல்லை, நான் சிறியவன், நேரமில்லை என்பது உனது பதிலா?**

நல்ல சமாரியனிடம் **இந்த பரிவும் பச்சாதாபமும்** உயிருக்கு போராடும் கள்வர்களால் தாக்கப்பட்ட யூதனுக்கு உதவிட தைரியத்தை தந்தது. அவன் விடுதிகாரரிடம் இந்த மனிதனை நன்கு கவனித்துக்கொள், பணம் போதவில்லையெனில் திரும்பி வரும்போது மீதமுள்ளதை தந்துவிடுவேன் என்று உறுதி கூறி – **எந்த எதிர்பார்ப்பும் இன்றி தனது பயணத்தை தொடர்ந்தார்.**

உன்னோடு இணைந்து நிற்கும் இந்த மானுடத்தைப் பார். உனது பரிவையும் பட்சாதாபத்தையும் பகிர்ந்திட எத்தனை வாய்ப்புகள் வலம் வருகிறது. இனியும் நல்ல சமாரியனுக்கு முன்பு சென்ற மத குரு, லேவியன் போல் **தட்டிக்கழிக்காதே**. தினமும் உனது கரங்கள் செய்யும் செயல்களில் ஒன்று இந்த அயலானுக்காக இருக்கட்டும்.

இந்த மண்ணில்தான் அன்னை தெரசாவும் வாழ்ந்தார்கள். **அன்னையின் அரவணைப்பை கல்கத்தா நகர வீதிகள் சுவைத்தன.** உன்னாலும் முடியும் - முயற்சித்துப்பார்.

**அன்பு என்பது வெறும் நினைவாகவும், வார்த்தைகளாகவும் இருப்பதை விட செயலாக பரிணமிக்கும் போதுதான்**
அதன் மதிப்பீடுகள் - நானே உயிர் – என உயிர்கொண்டு எழுகின்றன.

எங்கள் பேரில்.....

7. **ஏழாம்நிலை - இயேசு இரண்டாம் முறை கீழே விழுகின்றார்.**

திவ்விய இயேசுவே

**அளவுக்கு அதிகமானால் அமிர்தமும் நஞ்சு**

நண்பர்களே, எனது பயணத்தில் இரண்டாம் முறையாக நான் விழுந்துவிட்டேன்.

எனனோடு பயணிக்கும் உங்களுக்கு இது வருத்தத்தை அளிக்கின்றது. அதே வேளையில், விழாமல் இருக்கவேண்டும் என்ற எச்சரிக்கையும் எழுகின்றது. இருப்பினும், திரும்பிப் பார்த்தால் பல முறை விழுந்திருக்கிறீர்கள். நான் விழுந்தது இறைச்சித்தம், நீங்கள் விழுவது யாருடைய சித்தம் - வாருங்கள் பதில் என்ன என வாழ்க்கை பாடத்தை படித்துப்பார்ப்போம். **திருச்சபையின் மாபெரும் இரு தூண்கள் சீமோன் என்ற பேதுரு, மற்றும் சவுல் என்ற பவுல்.** இவர்கள் ஏன் விழுந்தார்கள் என்று கவனியுங்கள்.

நான் மிக தெளிவாக நேருக்குநேர் எச்சரித்த பின்பும், **வாழ்வுதரும் வார்த்தைகள் என்னிடம் தான் உள்ளது** என்று அறிக்கையிட்ட பேதுரு, திருவிருந்தின் போது நான் கூறிய வார்த்தைகளை நம்பாமல் **இறக்கவே நேர்ந்தாலும் உன்னை நான் மறுதளியேன்** என்று அவரை மட்டும், அவர் என் மீது கொண்டுள்ள அளவில்லாத அன்பை மட்டும் நம்பினார் - முடிவு கோழி கூவும்முன் மும்முறை மறுதளித்தார்.

இந்த சவுல் தான் ஒரு யூதன் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட இனம், தாவீதின் மரபினர், குரு கமேலியாவின் பரம சீடன், யூதமறை சட்ட வல்லுனன், வலிமைமிக்க வாலிபன், அனைத்திற்கும் மேலாக புதிய நெறியை சார்ந்தவர்களை வதைத்து கைது செய்யும் அதிகாரம் தலைமைச் சங்கத்தால் பெற்றவன் என்று, தனது **சுய பெருமை - தன் நம்பிக்கை இவைகளில் வீம்பு கொண்டு,** குதிரையில் ஏறினார். தமஸ்கு நகர் நோக்கி செல்லும் வழியில் குருடரானார். **ஏன் இப்படி நடந்தது?**

**பேதுரு** எனது முதன்மை சீடன், சவுல் யூத நெறியின் துடிப்புள்ள விசுவாசி, இருந்தும் பேதுருவிற்கு எனது வாழ்வு தரும் வார்த்தைகள் **அவருடைய விருப்பப்படி இல்லாததால்** திருவிருந்தின் போது அதனை ஏற்றுக் கொள்ளவில்லை-ஏமாந்து போனார், என்னை மும்முறை மறுதளித்தார். **சவுல்** சுய மரபு, ஜாதி, கல்வி என தன் பெருமைகளில் அதிகம் நம்பிக்கை கொண்டு தலைமைச்சங்கம் தந்த அதிகாரத்தை முன்னிலைப்படுத்தி-**தான் நினைப்பது நடந்தே ஆக வேண்டும்** என்று உறுதிக்கொண்டு குதிரை ஏறினார். இறைச்சித்தம் அவரை குருடாக்கியது.

ஆக, **தனது விருப்பப்படிதான் இறைச்சித்தம் அமைய வேண்டும் என நினைத்தவரும்** (பேதுரு) **நான் நினைத்ததுதான் நடக்க வேண்டும் என முயற்சித்தவரும்** (சவுல்) முன்பு நாம் கண்ட சீரோன் ஊரானாகிய சிமியோன், வீரப்பெண் வெரோணிக்காள் போல வாழ்ந்தாலும், கீழே விழுவது நிச்சயம். எனவே நீங்கள் மீண்டும் விழாமல் இருக்க கடவுளின் சித்தத்தை கேட்டு **அன்னை மரியாள் போல கடவுளின் வழி நடத்தலின்படி ஏற்றுக்கொள்ளுங்கள்.** உங்களுடைய விருப்பத்திற்கு இணங்க அதனை வளைக்க முயலாதீர்கள். இரண்டாவது நான் நினைப்பது தான் என்று ஆணவம் கொள்ளாதீர்கள். ஏனெனில் உங்கள் இடையேயும் ஒரு பழமொழி உண்டு.

**அடிக்கும் ஆடிகாற்றில் அம்மியே (திருச்சபையின் தூண்கள) பறக்கும்போது , இந்த அருகம்புல் (நீங்கள்) எம்மாத்திரம். ....இது இரண்டாவது எச்சரிக்கை.**

எங்கள் பேரில்....

8. **எட்டாம் நிலை- யூத பெண்கள் என் பின்னே அழுதுகொண்டு வந்தனர்** .

திவ்விய இயேசுவே..

**ஒரு பரிதவிப்பின் குரலோசை என் காதுகளில் விழுகிறது.**

என் கல்வாரிப்பாதையில் என்னை சுற்றி மனிதர்கள், குதிரைகள் கூடவே சவுக்கடிகள் உண்டாக்கிய பலவகை ஓசைகளோடு எனது பலவீனமும் துன்பமும் இணைந்து என் காதுகளை ஏறக்குறை மந்தமாக்கிவிட்டன. இருந்தாலும், **தூரத்தே இருந்து வரும் ஒரு பரிதவிப்பின் குரலோசை என் காதுகளில் விழுகின்றது.** எனது துன்பத்தின் உச்சத்திலலும் எனக்காக தவிக்கும் தாய்மார்களின் அழுகை ஓசை எனக்கு கேட்கின்றது. என் பாடுகளில் இருந்து நான் விடுதலைபெற வேண்டும் என்பதற்காக, எழுந்த ஓசை எனக்கு மிகுந்த சந்தோஷத்தை தந்தது. **ஆனால் இறைச்சித்தம் என்ன என்பது எனக்குமட்டும்தான் தெரியும்**.

அந்த அன்பு உள்ளங்களை பார்த்து, நான் **நீங்கள் எனக்காக அழவேண்டாம். உங்களுக்காகவும், உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்** என்று கூறியது ஏன் தெரியுமா? அந்த அன்பு பெண்மணிகளின் - இறைச்சித்தத்தை உணர்ந்து கொள்ளாத அறியாமைக்காகவும், உலகிற்கு மீட்பை நான் தந்த பின்பும் என்னோடு இணைய மறுக்கும் அவர்களுடைய பிள்ளைகளின் மனமாற்றத்திற்காகவும் தான் அழுங்கள் என்றேன்.

இந்த அழுகை ஓர் ஆசீர்வாதம், **பெருமூச்சோடும் பேரிரைச்சலோடும் அழுகையோடும் எழுப்பப்படும் விண்ணப்பங்கள் விண்ணகத்தையே அசைத்துவிடும்** என்று வாசித்திருப்பீர்களே. அது மட்டுமல்ல இந்த அழுகை மனிதரின் ஐம்புல உணர்வுகளின் ஓர் ஒட்டுமொத்த முழுமையான வெளிபாடு. இது **மனிதனின் உடலையும், உள்ளத்தையும் நெகிழ்ச்சி அடைய செய்கிறது.**

நீங்கள் அழுதிருக்கிறீர்களா?

**உங்களுக்கு தெரியுமா, உங்கள் அழுகைதான் நீங்கள் பிறந்தபோது – உங்களுக்கு உயிர் உள்ளதை உலகிற்கு உறுதி செய்தது. அதே போல் மக்கள் உங்களை சுற்றி அழுதால் உங்களுக்குள் உயிர் இல்லை என்று உலகம் உணர்ந்து கொள்ளும்.** உங்களுக்கு உயிர் உள்ளது என்று நிரூபிக்க நீங்கள் உங்களுக்காக, உடன் பிறப்புகளுக்காக, ஏன் உலகிற்காக அழுதே ஆக வேண்டும். இல்லையெனில் **உலகம் உங்களுக்காக அழுவது உங்கள் காதில் ஒலிக்கும்.**

எனவே இறைவனோடு ஐக்கிமாகிட இறைசித்தம் என்ன என்பதை அறிந்திட உங்களுக்காக அழுங்கள். அயலானை அரவணைக்கும் அணையாத அன்பிற்காக ஆண்டவரை நோக்கி அழுங்கள். மனிதநேயம் உலகெங்கும் மலர்ந்து மணம் வீசிட பெருமூச்சுடனும், அழுகையுடனும் நிறைந்த மன்றாட்டுகளை மாபரனை நோக்கி ஏறெடுங்கள்.

யூத பெண்களின் அழுகையை நான் கேட்டேன். **உலகம் அழுகின்ற ஓசையை கேட்க, செவியுள்ள நீங்கள் மனதார கேட்டு,** பெருமூச்சும் அழுகையும், பரிதவிப்பும் உள்ள மன்றாட்டை இறைவனை நோக்கி எழுப்புங்கள்.

எங்கள் பேரில்......

9. **ஒன்பதாம் நிலை - இயேசு மூன்றாம் முறையாக மண்ணில் விழுகிறார்.**

திவ்விய இயேசுவே…

**மூன்றாம் முறைாயக மண்ணில் விழுந்தேன்.**

வழக்கு மன்றங்களில் நீங்கள் மூன்று முறை செய்யும் சத்தியம் - உறுதிமொழி - அதைத் தொடர்ந்து நீங்கள் சொல்வதெல்லாம் உண்மை என உறுதி செய்கிறது. திருமண பந்தத்தில் நீங்கள் இடும் மூன்று முடிச்சு அந்நேரம் வரை தனித்தனியாக வாழ்ந்தவரை **மரணம் வரை பிரிக்க இயலா ஓர் உறவாக உண்டாகுகிறது.** ஆம் அதே போலத்தான் இந்த மண்-**மண்ணாலான மனிதன் எனக்கு மட்டுமே சொந்தக்காரன்** என்று வெளிப்படையாக என்பிக்கவே இந்த விண்ணவன் மண்ணை மூன்றாம் முறையாக முத்தமிட்டான். எனக்கு நீங்கள் சொந்தக்காரர் என்று, நான் உங்களை எனது வாழ்வின் கடை எல்லைவரை அன்னை மரியாளாக இல்லையென்றாலும், நல்லகள்ளனாக நீங்கள் வருவீர்கள் என என் கையை விரித்து நடுவினில் நிற்க வேண்டியே வந்தாலும் **அப்பா என்றழைக்கும் உங்கள் நம்பிக்கையின் குரலை** கேட்க ஆவலுடன் காத்திருக்கிறேன். இது என் நிலை, **சரி உங்கள் நிலை என்ன?**

இதோ – பாருங்கள் தாவீது அரசன், மற்றும் எனது நண்பன் யூதாஸ். இவர்கள் இருவரையும் யூதாஸ் நல்லவர், எங்கள் குழுவில் பொறுப்புள்ள பணியாளர், இருந்தும் அவர் **அவரது நினைவுகள்படி என்னை பயன்படுத்த,** நன்கு திட்டமிட்டு-தானாக செயல்பட்டார். **வேதனைக்கு உள்ளாகியது மட்டுமின்றி, மரணத்திற்கு இட்டுச்சென்றது - மனமாற்றத்தைத் தராத மனவருத்தம்.** யூதாஸ்க்கு **மரணத்தை உறுதி செய்தது.**

மாறாக தாவீது அரசன் இறைவனால் சிறப்பான அருட்பொழிவு பெற்ற ஓர் மனிதர். அவர் தனது படைவீரன் உரியாவின் மனைவியை தனதாக்க, போர்க்களத்தில் உரியாவை கொலை செய்தார். ஆனால் அவரது மனவருத்தமும் மனமாற்றமும் **இறைவா உமக்கெதிராக மட்டுமே பாவம் செய்தேன்.** உமது திரு முன்னிலையிலேயே பாவம் செய்தேன். (தி.பா.51:4) என **தன்னைத் தாழ்த்தி, இறைவனை நோக்கினார். மன்னிப்பு பெற்றார்.** சாலமோனை தன் அன்பு மகனாகவும் பெற்றார்.

தவறு செய்த தாவீது, யூதாஸ் இருவருக்கும் **மனவருத்தம் நிறைய இருந்தது.** ஆனால், யூதாஸ் **இறைவனை நம்பாமல், தன்னையே – தானாக நியாயப்படுத்தி** மரணத்தை பரிசாகப் பெற்றான்.–**தன்னைத்தானே தீர்ப்பிட்டுக்கொண்டான்.** தாவீது மனம் வருந்தி **இறைவனின் மன்னிப்பை நம்பினார் -** ஆண்டவரின் கைகளில் நான் சரண அடைவதே மேல், **ஏனெனில் அவர் மிகவும் இரக்கம் கொண்டவர்** (1குறி.21:13) என்று சரணடைந்து, தூயதோர் உள்ளத்தை என்னகத்தே உருவாக்கும் என மன்றாடி(தி.பா.51:10) நிலை வாழ்வை பெற்றுக்கொண்டார்.

**இறைவன் தரும் சொந்தத்தை, நீங்கள் தனதாக்கிக் கொள்ள - உங்கள் மனவருத்தம் அவரோடு ஒப்புரவாகிடும் மனமாற்றத்தை தருவதாக–** ஏனெனில் தள்ளுண்டவன் முற்றிலும் கெட்டுப்போகாதபடி அவர் கண்டும் பொறுத்துக்கொண்டு வருகிறார். (2 சாமு:14-14) என்பதை இனியாவது நீங்கள் உணர்ந்து கொள்ளுங்கள்.
**சொந்தங்கள் விலகி வாழக்கூடாது, இணைந்து வாழ வேண்டும். எழுந்துவா, விரைந்து வா, என்னை அரவணைக்க வா. இம்மானுவேலனாக உன்னோடு என்றும் இருக்க விரும்புகிறேன்.**

எங்கள் பேரில்.....

10. **பத்தாம் நிலை - இயேசுவின்ஆடைகளை அகற்றுகிறார்கள்.**

திவ்விய இயேசுவே…

**என்னை நேசிக்கும் வாலிப உள்ளங்களே,**

எனது ஆடையை களைந்தார்கள், நிர்வாணம் ஆக்கினர் என்ற சொற்களை நீங்கள் கேட்கும் போதே உங்கள் முகம் கோணிக்குறுகுவதை காண முடிகிறது. கேட்கின்ற நீங்களே இப்படி நெளியும்போது அனுபவித்த நான் எப்படி இருந்திருப்பேன்? இதுவரை எனக்கு நிகழ்ந்த கொடுமைகளில் முத்தாய்ப்பான கொடுமை எனது ஆடையற்ற நிலைதான். இருந்தாலும் இது இறைசித்தம். எனவே முழுமனதாய் ஏற்றுக்கொண்டேன்.

இன்பவனத்தில் முதல் மனிதன் **ஆதாம் ஆடையின்றி இருந்தான்**, ஆனால் **இறைவனோடு இன்பமாய் இருந்தான்.** இந்த மனுக்குலம் இறைவனோடு இன்பமாய் இருந்திட இந்த **இரண்டாம் ஆதாமாகிய இயேசு** என்ற நான் **கல்வாரியில் நிர்வாணமாய் நின்றேன்**. இறைவனுக்கு பலியாக தரப்படும் விலங்குகள் கூட முதலில் சுத்தம் செய்யப்பட்டுதான் பலியாக்கப்படுகின்றன. உன்னத இறைவனுக்கு **உகந்த பலியாக என்னை அர்ப்பணிக்க** சேவகர்கள் எனது ஆடையை களைந்து **என்னை பரிசுத்த பலிபொருளாய் நிறுத்தினார்.**

நீங்களும் பரிசுத்த பலிப்பொருளாக அர்ப்பணம் ஆகிட அழைக்கப்பட்டுள்ளீர்கள். அப்படி என்றால் நீங்கள் ஒவ்வொருவரும் **உள்ளத்தில் ஒன்றும் இல்லாத நிர்வாண நிலையை** அடைந்தாக வேண்டும். அப்படி நிகழும் போது நிர்மலமான உங்கள் உள்ளத்தில் **இறைவன் முழுமையாய் நிறைந்திருப்பதை** நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள்.

உங்களுடைய உண்மையான **மனவருத்தமும், ஜெபவாழ்வும்,** மேலும் திருமுழுக்கு முதல் இன்றுவரை தொடரும் திருச்சபையின் வழிநடத்துதலும், எனது ஆடையை அகற்றிய அந்த சேவகர்கள் போல் உங்கள் மேல் ஒட்டியுள்ள **அலகையின் ஆடையை-தீமைகளை**-அகற்றிட கவனமுடன் உதவிட காத்திருக்கின்றனர். **நீங்கள் அனுமதித்தால்**, உங்களை **இறைவன் முன்னிலையில் நிர்வாணம்** ஆக்கினால் வாழ்வான இறைவன் வல்லமையோடு உங்கள் இதயத்தில் வாசம் பண்ணுவார். கவனியுங்களே. இன்பவனத்தில் **ஆதாம் நிர்வாணியாக இருந்தபோது அவனோடு இறைவன் இருந்தார். ஆதாமின் உள்ளத்தில் இறைவன் மட்டும் இருந்தபோதுதான் ஆதாம் இன்பமாக இருந்தான்.**

நீங்கள் இன்பமாய் இருக்க வேண்டாமா? யோசியுங்கள். அலகையின் ஆடைகளை **களைந்தவர்களாக** மாறினால் மட்டுமே இன்பவனம் உங்கள் உடமையாகும். இல்லையெனில் ஏவாளை அலகை அழைத்ததைப்போல மீண்டும் மீண்டும் உங்களை அழைத்துக்கொண்டே இருக்கும். இயேசுவாகிய என்னைப்பற்றி எனது அடியான் பவுல் கூறும் போது **தன்னையே வெறுமையாக்கி** என்று கூறுவான். **இறைவனுக்கு ஏற்புடைய பலியாக தன்னையே வெறுமை ஆக்குவது மிக மிக முக்கியம்.**

வாருங்கள் நம்முன் உள்ள உலகின் பற்றுக்கள், மற்றும் அலகையின் தீமைகள் **அனைத்தையும் வெறுமையாக்கி** அடிமையாய் இறைவன் முன் நிர்வாணியாய் **அவருக்கு உகந்த ஏற்ற பலிப்பொருளாக** நம்மையே மாற்றிட மனம் மாறுவோம்.

எங்கள் பேரில்…

11. **பதினொன்றாம் நிலை - இயேசுவை சிலுவையில் அறைகிறார்கள்.**

திவ்விய இயேசுவே.....

**சிலுவையில் நான் அறையப்பட்டேன்.**

இதுதான் அருவெறுப்பின் சின்னமான இந்த மரச்சிலுவை , வெற்றியின் சின்னமாக உருமாறிய உன்னதமான நேரம். அதே வேளையில் நானோவெனில் குற்றவாளிகளுக்குள் குற்றவாளியாக கருதப்பட்டு இந்த **சிலுவையோடு இணைந்ததால்** இந்தச் சிலுவை வெற்றியின் சின்னமாயிற்று.

இந்தச் சிலுவை யார் தெரியுமா? விண்ணையும், மண்ணையும் இணைக்கும் ஓர் அற்புதங்களின் ஊடகம், உபகரணம். இன்று **ஊடகங்கள் இல்லாத ஒரு வாழ்க்கையை** உங்களால் வாழ்ந்திட முடியுமா? கணனி, கைபேசி, காணொலி, தொலைக்காட்சி, மின்காந்தவலை என எத்தனை ஊடகங்கள் மின்மயமான உபகரணங்கள் **உங்கள் வாழ்வை மையப்படுத்தியுள்ளன. இப்படி ஊடகங்களுக்கு ஊடகமான** நீ, உன்னத தேவனுக்கும், உலக மாந்தர் அனைவர்க்கும், **இந்த கல்வாரி சிலுவை தான் உறவை வளர்க்கும் ஊடகம்** என்பதை என்றும் நினைவில் வை.

பாலை நிலத்தில் பாம்பை உற்று நோக்கியவன் வாழ்வு பெற்றான். இன்று இந்த **கல்வாரிச் சிலுவையை உற்று நோக்குபவன் மீட்பை பெறுவான்.** ஏனெனில், பழைய ஏற்பாட்டின் காலத்தில் இன்பவனத்தை ஆதாம் பிரிந்தபின் தனிமையான இறைவன் - இந்த கல்வாரிக் காட்சிகள் நிகழும் வரை வல்லமையுள்ள இறைவனாக மட்டும் இருந்தார். **அதுவும் தனியாகவே இருந்தார்.**

**இந்தக கல்வாரி காட்சிக்குப்பின்,** மனுக்குலத்தோர் **அப்பா தந்தாய்** என அழைக்கும் தந்தைக்குத் தந்தையாக, சகோதரனாக, நண்பனாக, **உறவுகளுக்குள் உறவாக** உங்கள் உள்ளங்களில் கலந்துள்ளார். இத்தகைய மாண்புள்ள உறவை உனக்குத் தந்தது இந்தச் சிலுவைதான். சிலுவையைப் உற்றுப்பார் சிலுவையோடு இணைந்துள்ள இயேசுவாகிய **நான் உனக்கு உரிமையாக்கிய உறவின் மகிமை நன்கு புரியும்**. ஆம் நேற்று வரை நீ வெறும் இறைவனின் படைப்பு - மனிதன். இப்போது **நீ இறைவனின் பிள்ளை, அன்பு மகன், மகள்** புரிந்துக்கொள்.

சவுலுக்கு உரோமைக்குடிமகன் என்ற சிறப்பு இருந்தது. உனக்கு **கிறிஸ்துவின் உரிமைக் குடிமகன், கிறிஸ்தவன் - என்ற உரிமையும் பெருமையும் வேண்டுமன்றோ.** இதோ மனிதத்துடன் நேராக நிமிர்ந்து, மனித நேயத்தால் வந்தோரை அரவணைக்க கையையும் விரித்து, **மன்னிப்பால் இணைந்துள்ள இந்த சிலுவையின்** அருகே வா, வந்தால் **தெய்வபயம் , விசுவாசம், மற்றும் மனமாற்றம்** என்ற **மூன்று ஆணிகளால்** மனுமகனனோடு இணைக்கப்படுவாய். அப்போது **அப்பா தந்தாய் என்ற உறவின் ஒலி** உன்னில் எழும்பும்.

**உறவுகள் கேள்வியான இந்த காலகட்டத்தில்** இயேசுவாகிய, இந்த மண்ணில் **உறவுகளுக்கு நீயே விதையானால்** மன்னிப்பு என்ற உரமிட்டு, ஜீவ நீரூற்றாக நானே உன்னை வளர்த்து பெரிய மரமாக்குவேன். அப்போது **உனது கனிகள் வாழ்வு தரும் சிலுவையின் கனியாகி** அயலானுக்கு அன்பின் விருந்து படைக்கும்.

**உனக்கு மீட்பும் மகிழ்வும் இந்த கல்வாரிச் சிலுவைதான்.**

எங்கள் பேரில்.....

12. **பன்னிரெண்டாம் நிலை – சிலுவையில் இயேசு உயிர் விடுகின்றார்.**

திவ்விய இயேசுவே.....

**மரணம் என்னை ஏற்றுக்கொண்டது கல்வாரி எனக்கு சொந்தமானது**

பிறப்பு என்று ஒன்று இருக்கும் போது மரணம் என்ற ஒன்று இருக்கும். எனக்கு நிகழ்ந்த **இந்தக் கொடூரமான மரணம் என் பகைவனுக்கும் நிகழாமல் இருக்க வேண்டும்.**

இன்றைய காலக்கட்டத்தில் செய்தித்தாள்களை படித்தாலோ, தொலைக்காட்சிப் பெட்டிகளை இயக்கினாலோ அதிகமாக நினைவு கூறப்படுபவை மரணங்கள்தான். நோய், மூப்பு, விபத்து என எத்தனையோ வகை மரணங்கள் தினமும் கண்முன் வருகின்றது. ஆக **மரணம் இன்று மனிதருக்கு சகஜமாகிவிட்டது.** பிறகு ஏன் நீங்கள் எல்லாரும் ஒன்று கூடி மிகவும் துக்ககரமான என் மரணத்தை கடந்த **2000 ஆண்டுகளாக** நினைவு கூறுகிறீர்கள். **பாரம்பரியமாகவா? பக்தி முயற்சியா? அல்லது பயன்கள் வேண்டியா?**

எனது மரணப்பாடுகள் மிகக் கொடுமையானவைதான். நீங்கள் பிறந்தது முதல் தியானித்து வருகிறீர்கள். இன்று நீங்கள் எப்படி, எதற்காக இங்கு கூடி இருக்கிறீர்கள் என்பதைமட்டும் தியானிப்போம். இதில் எனது விருப்பம் என்ன என்றும் யோசிப்போம்.

பாருங்கள் விவிலியத்தில் **முதல் பிரிவினராக**, யோவான்19:25-26-ல் எனது தாயாரும், எனது தாயின் சகோதரி மரியாளும், மதலேன் மரியாளும் எனது அன்புச் சீடரும் எனது சிலுவை அருகில் நின்று கொண்டிருந்தனர் - என படிப்பீர்கள். **இரண்டாவது பிரிவினராக** லூக் 23:49-ல் எனக்கு அறிமுகமானவர்களும், கலிலேயாவிலிருந்து என்னைப் பின் தொடர்ந்த பெண்களும், தொலைவில் நின்று இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்தனர் - என வாசிப்பீர்கள்.

முதல் பிரிவினர் எனது அன்புத்தாய், அன்புச்சீடர், என்னை நேசித்த மதலேன் மரியாள், இவர்கள் **எனது சிலுவையின் அடியில் மிக அருகில்** நின்றனர். தாய் மற்றும் அன்பு சீடருக்கு - **அன்பின் உறவை** தாய் மகன் உறவை தந்தேன். நேசித்த மதலேன் மரியாளுக்கு நான் உயிர்த்த பின் **காட்சிதந்தேன். எனது உறவினர் - பங்காளிகள்** ஆக்கினேன். இரண்டாம் பிரிவினர் எனக்கு அறிமுகமாயிருந்தும், கலிலேயாவில் இருந்து என்னைத் தொடர்ந்து வந்தும் **அருகில் வராமல் தொலைவில் நின்று பார்வையாளர்கள் ஆனார்கள்.** பயன் பெறாமல் போனார்கள்.

மரணம் நிகழ்ந்த வீட்டில் உறவினர் - பங்காளிகள் என அனைவரும் துக்கம் மூன்று நாள் என்று வேதனையோடு இருப்பார்கள். ஆனால் மூன்று நாளுக்கு பின் **அவர்களுடைய கடைசி மூச்சு உள்ளவரை இறந்துபோனவரின் எண்ணங்களை செயல்படுத்த** பங்கு பெற்று பங்காளிகள் ஆவார்கள். பத்தோடு, பதினொன்றாகக் கூட்டத்தில் ஒரு பார்வையாளனாக உன்னை இங்கு அழைக்கவில்லை. மாறாக, எனது இரத்த உறவினராக **உலகிற்காக உன்னையே பங்களிக்கும் பங்காளியாக** பார்க்க விரும்புகின்றேன்.

நீ எனது உறவினன், **உனக்காக மட்டும் தான்**, விண்ணகம் விட்டு மண்ணகம் வந்து, இந்த அடிமைக் கோலம் ஏற்று - **எனது வாழ்வை உனக்கு வழங்கினேன்**. அருகில் வா. உன்னைக் கட்டி அணைக்க விரிந்து இருக்கும் எனது கரங்களின் அரவணைப்பபை, அன்பை, உறவை உனது உரிமையை சொந்தமாக்கு. **இந்த கல்வாரி உனக்கு சொந்தம் என்றால் உனது கடைசி மூச்சு உள்ளவரை கடவுள் உனது சொந்தக்காரர்.**

எங்கள் பேரில்.......

13. **பதிமூன்றாம் நிலை - அன்னையின் மடியில் இயேசுவை வளர்க்கிறார்கள்.**

திவ்விய இயேசுவே......

**பாவத்தின் சம்பளம் மரணம் என்று கேட்டிருப்பீர்கள். அன்னை மரியாளாகிய நான் கூறுகின்றேன்.**
**பலவீனத்தின் சம்பளமும் மரணம்தான்.**

இது வரை எனது மகன் உங்களோடு பேசினார், கேளுங்கள் இப்போது நான் பேசுகின்றேன். முதல் ஏவாள், அலகை முன் நிறுத்திய கனியை பார்த்தால், மனிதரிடையே **பாவமும் மரணமும்** வந்தது. இரண்டாம் ஏவாள் நான், என் மடியில் வளரும் **கல்வாரியின் கனியாம் மனுமகனை** உங்கள் பார்வைக்கு நிறுத்தியுள்ளேன். நீங்கள் இவரைப் பார்த்தால் **மீட்பும் - நித்திய வாழ்வும்** உங்கள் உடமையாகும்.

இறைவனின் அடிமையாக, **இறை சித்தமே எனது வாழ்வாக** நான் வாழ்ந்து வந்ததால், இன்று இந்த கடும் கொடூர நிகழ்வையும், **அமைதியாக கடந்திட** ஆசீர்வதிக்கப்பட்டேன். எனது மகன், **மனுக்குல மீட்பின் மேல் கொண்ட அளப்பறியா** ஆவலால், தன்னையே மறுத்து அடிமை கோலம் ஏற்றதால், **பலவீனம் பெற்று** மண்ணில் சாய்ந்தார். எனது மகனின் மரணம் பாவத்தால் ஏற்படவில்லை, மாறாக **மனுக்குல மீட்பின் மீது அவர் கொண்ட எல்லையற்ற அன்பால்** - அவரை பலவீனப்படுத்தி மரணத்தை பரிசளித்தது.

நான் எனது பலமான வாலிபம், கன்னிமை இவைகளை கடவுளிடம் இழந்தேன். அவருடைய அடிமையாகி மனுக்குல மீட்பில் நானும் ஒரு கருவி ஆனேன். எனது மகன் அவருடைய பலமான விண்ணகத்தை விட்டுவிட்டு பலவீனங்கள் நிறைந்த இம் **மண்ணுலகில் மனிதன் ஆனார்.** மனுக்குலத்திற்கு மீட்பின் வெற்றியை பெற்றுத் தந்தார். இதைக் கண்ணுற்ற இறைவன் **இவரே என் அன்பார்ந்த மகன்** என்று பூரிப்படைந்தார்.

நான் வாழ்ந்த காலத்தில் பெண்கள் சுதந்திரம் அற்றவர்கள். அவர்கள் என்றும் ஆண்களைச் சார்ந்தே வாழவேண்டும், இருந்தும், கலிலேயாவில் உள்ள நாசரேத்து முதல் இந்தக் கல்வாரி வரை நான் வெற்றிக் கண்டேன் எனில் அது **இறைவனால் கூடும்** என்று கபிரியேல் தூதர் கூறிய **வார்த்தையின் நிறைவுதான்.** இன்று நீங்கள் அனைவரும் சுதந்திரமாக, நலமாகவும், உயர்கல்வி, பொருள்வளம் என எல்லா நிலைகளிலும் - மேன்மை அடைந்துள்ளீர்கள். நன்று. இன்று உங்களுக்கு இந்தக் கல்வாரி காட்சி கற்றுத் தந்த பாடம் என்ன? உங்களுடைய சுதந்திரமானது வாழ்வில் இறைசித்தத்தை உங்களுக்கென அவர் தரும் செய்தியை அறிந்திட பயன்படுகிறதா?

நாசரேத்தில் கபிரியேலின் வழியாக **கடவுளின் அழைப்பை ஏற்றேன்**. மனுமகன் மகனாக வந்தார். **கல்வாரியில் மனுமகன் அழைத்தார்.** அன்புச் சீடரின் தாயானேன். **எதிர்ப்பார்ப்புகள் இல்லாத எனது வாழ்க்கையில் ஏமாற்றங்களும் இல்லை. இதோ என் தாய், இவரே என் அன்பார்ந்த மகன்** என்று இறைவன் உங்கள் ஒவ்வொருவரையும் பார்த்துக் கூற எதை விட வேண்டும் **அல்லது** எதை பெற வேண்டும் என நீங்களே முடிவு செய்யுங்கள். நாசரேத்தூரில் என்னை விட்டுக்கொடுத்தேன் எதையும் இழக்கவில்லை. கல்வாரியில் விரும்பி ஏற்றுக்கொண்டேன் பாரசுமையாக ஏதும் இல்லை. ஆம் இறைவனுக்காக **உங்களை விட்டுக்கொடுப்பதாலும் அவரையே நீங்கள் விரும்பிச் சுமப்பதாலும் இழக்கப்போவது ஏதும் இல்லை**.

எங்கள் பேரில்......

## 14. பதினான்காம் நிலை - இயேசுவை அடக்கம் செய்தனர்

திவ்விய இயேசுவே......

**உலகிற்கு அது கல்லறை, கிறிஸ்துவனுக்கோ அது விண்ணக கருவறை**

அரிமத்தியா ஊர் யோசேப்பும், நிக்கதோமுவும், இயேசுவின் உடலை எடுத்து யூதரின் அடக்க முறைப்படி **பரிமளப்பொருட்களுடன் துணியில்** சுற்றிக் கட்டினார்கள். அவர் சிலுவையில் அறையுண்ட இடத்தில் ஒரு தோட்டம் இருந்தது. அத்தோட்டத்தில் **புதுக்கல்லறை** ஒன்று இருந்தது. அதில் **யாரையும் அதுவரை** வைத்ததில்லை. **அருகிலேயே அந்தக் கல்லறை இருந்தாலும்** அன்று யூதரின் பாஸ்காவிற்கு **ஆயத்த நாளானாதாலும்** இயசுவை அதில் வைத்தனர். (யோவான்-19:39-42).

மரித்த இயேசுவின் திரு உடலை இரத்தமும் சதையும் கொண்ட உயிரற்ற உடலை ஏற்றுக் கொள்ளுவதற்கு அந்தக் கல்லறை-(1) மிக அருகில் இருந்திருக்கிறது, (2) அதுவரை அது தனக்குள் யாரையும் வைக்காமல் வெறுமையாய்-புதியதாய் இருந்திருக்கின்றது. ஆக இன்று நாம் இயேசுவின் அருகில் **நம்மை வெறுமையாக்கி புதியதாய், புதுப்பிறப்பாய் நின்றோம்** எனில் இயேசுவை தாங்கும் தகுதி நமக்கும் உண்டு.

யோசேப்பும், நிக்கதோமுவும் - பரிமளப் பொருட்களடன் துணியில் சுற்றிக்கட்டி முழுமையாக பவ்யமாய் கல்லறைக்குள் மரித்த இயேசுவின் உடலை வைத்தனர். ஆனால் இன்று திருச்சபை நமது தகுதியை **ஒப்புரவு அருட்சாதனத்தால்** புனிதமாக்கி, பின் பரிமளப் பொருட்களாம் மற்ற திருவருட்சாதனங்களுடன், தூய வெண்துகிலாம் **திருப்பலி, ஆராதனை மற்றும் புனிதர்களின் பரிந்துரைகளின்** வழியாக நாம் நினைத்தும் பார்க்க முடியாத அந்த அற்புதத்தை உயிரோடு உள்ள இரத்தமும் சதையும் கொண்ட அன்பின் தேவனை முழுமையாக சகல தேவ ஆசீர்வாதங்களோடு நமக்குள் **அன்பின் திவ்விய நற்கருணையாக** தந்திட தயாராக உள்ளது. இப்படிப்பட்ட **ஆசீர்வாதத்தை நாளை – அடுத்த நாள் ஏற்றுக்கொள்கிறேன்** என நாம் தள்ளிப் போடலாமா? கூடாது ஏனெனில் அடுத்தநாள் ஓய்வுநாள், அந்நாள் ஒருவேளை நமது வாழ்வின் ஓய்வு நாள் - மரணநாளாகவும் அமையலாமே. எனவே இன்றே ஓய்வு நாளைக்கு முந்திய இந்த ஆயத்தநாளிலேயே நம்மை நன்கு ஆயத்தப்படுத்தி ஆண்டவர் இயேசுவை நமது ஆத்துமம் என்ற விண்ணகக் கரு அறைக்குள் ஏற்றுக் கொள்வோம்.

**உன்னத தேவன் இயேசு, நமது உள்ளத்தில் உயிரோடு உயிராக,**
**நமது உறவாக இருள் நீக்கும் ஒளியாக, வலம் வருவார்.**

அப்போது நாமும் நமது அயலானுக்கு அவனது இடறலைப் போக்க உதவும் உலகின் ஒளி ஆகுவோம். இதைக் கண்ணுரும் **நமது விண்ணகக் கரு இயேசு** நமக்கு உயிர்ப்பை உரிமை ஆக்குவார். முடிவாக

**நமது விண்ணக உயர்வை நமது உரிமை ஆக்குவார்.**

எங்கள் பேரில்......